**சுற்றறிக்கை எண்: DOTE/194/2025-RO2 நாள்: 10-03-2025**

பொருள் : அரசு வணிகவியல் தேர்வுகள் - வணிகவியல் பயிலகங்கள் - தமிழ்99 விசைப்பலகை பயன்படுத்தி மாணாக்கர்களுக்கு பயிற்சி வழங்க தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை நிலை எண் : 17, தகவல் தொழில்நுட்பத் துறை, நாள் 13.06.1999.

2. அரசாணை நிலை எண் : 29, தகவல் தொழில்நுட்பத் (பி1) துறை, நாள் 23.06.2010.

3. தமிழ் இணையக் கல்விக்கழகம் இயக்குநர் (மு.கூ.பொ.) அவர்களின் கடிதம் எண் TVA/Tamil99/2024 நாள் 11.11.2024.

*****

பார்வை (3) ல் காணும் கடிதத்தில், பார்வை (1) மற்றும் (2) ல் காணும் அரசாணைகளின்படி தமிழ்99 விசைப்பலகை மட்டுமே அரசால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ் தட்டச்சு விசைப்பலகை எனவும் தமிழ்99 விசைப்பலகை மூலமாக தொழில்நுட்பப் பயிலகங்கள் தமிழ் தட்டச்சு பயிற்சிகளை வழங்க அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, தமிழ் இணையக் கல்விக்கழகம் தெரிவித்துள்ள அரசாணைகளின்படி தட்டச்சு பயிற்சி அளிக்கும் வணிகவியல் பயிலகங்கள், புதிதாக தட்டச்சு பயிற்சியை துவங்கவுள்ள மாணாக்கர்களுக்கு தமிழ்99 விசைப்பலகை பயன்படுத்தி தமிழ் தட்டச்சு பயிற்சியினை வழங்க தங்களின் வணிகவியல் பயிலகங்களை மேம்படுத்திக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், ஏற்கனவே பயிற்சிகள் மேற்கொண்ட மாணாக்கர்கள் நலன் கருதியும், வணிகவியல் பயிலகங்கள் படிப்படியாக மேம்படுத்த ஏதுவான சூழல் அமையவும், சில தேர்வுகளுக்கு மட்டும், பழைய தட்டச்சு இயந்திர விசைப்பலகை (old typewriter keyboard layout) கொண்ட தட்டச்சு இயந்திரங்கள் மூலமும் தட்டச்சு தேர்வுகள் நடத்தப்படும் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஓம்/-
**J.INNOCENT DIVYA**
தேர்வு வாரியத் தலைவர்

**Signed by Ramarathnam Ramaswamy**
**Date: 10-03-2025 10:37:21**